# வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அண்ணாநகர் மண்டலத்தில் புதிய மகப்பேறு மருத்துவமனை கட்டும் பணி

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்



**சென்னை,ஜூன்.13**

இந்து சமயம் மற்றும் அற நிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி. கே.சேகர்பாபு (12.06.2025) வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அண்ணாநகர் மண்டலம், வார்டு-96, யுனைடெட் இந்தியா நகர், முதல் பிரதான சாலையில் பழுதடைந்த நிலையில் இருந்த மகப்பேறு மருத்துவமனையினை இடித்துவிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.9.17 கோடி மதிப்பீட்டில் புதிய மகப்பேறு மருத்துவ மனை கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த மருத்துவமனைக் கட்டடமானது, 1275 ச.மீ. பரப்பளவிலான இடத்தில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்கள் என தலா 746 ச.மீ., அளவுடன் 2238 ச.மீ. பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இதில் 2 அறுவை சிகிச்சை அறைகள், 41 படுக்கைகள் கொண்ட படுக்கை வசதிகள், அவசர சிகிச்சை பிரிவு, மருந்தகம், ஸ்கேன், இரத்த சேகரிப்பு அறை, எக்ஸ்ரே வசதிகள், 2 மின் தூக்கிகள், 2 படிக்கட்டுக்களுடன் NICU கொண்ட நவீன மகப்பேறு மருத்துவமனையாக அமைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்று, திட்டப்பணிகளை விரைந்து செயல்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் ஆர். பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர்.ஆ.வெற்றி அழகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன்,சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) .வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர்கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர்கள்கூ.பி.ஜெயின், சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் எஸ். தனலட்சுமி, .டி.வி.செம்மொழி மற்றும் தொடர்புடைய சேவைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் கூடுதல் பள்ளிக் கட்டிடம், சமூக நலக்கூடம், கால்வாய் புனரமைப்பு பணி: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

**சென்னை,ஜூன்.13**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (12.06.2025) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-139, ஜாபர்கான்பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளியில் மூலதன நிதியின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஜாபர்கான்பேட்டையில் உள்ள மாநகராட்சி சமூக நலக் கூடத்தினை ரூ.93.27 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி மற்றும் சுந்தரமூர்த்தி தெரு முதல் கண்ணம்மாள் தெரு வரை உள்ள கால்வாயில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைக்கும் பணி ஆகிய வற்றைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், மழைநீரை சேமிக்கும் வகையில் வார்டு-140க்குட்பட்ட டாக்டர் அம்பேத்கர் விளையாட்டுத் திடலில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுடைய Eco Blocks மூலம் மழைநீர் சேமிக்கும் வசதியினைத் தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சி முன்னெடுத்துள்ள புதுமையான மழைநீர் சேமிப்பு திட்டமாக, 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட Eco Blocks மூலம் மழைநீர் சேமிக்கும் வசதி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது நிலத்தடி நீரை மேம்படுத்தவும், சென்னை மாநகரில் ஏற்படும் வெள்ளத்தைத் தடுப்பதற்கும், முக்கியமான நிலைத்த நீர் மேலாண்மை முயற்சியாகும். மழைநீரை சிக்கனமாக சேகரித்து, தரையை ஊடுருவச் செய்வதற்கான வடிவமைப்புடன் இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது.



இத்திட்டம் பூங்கா, நடைபாதை, சாலை மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற பகுதிகளில் மழைநீர் ஊடுருவ முடியாத இடங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மழைநீர் ஊடுருவும் வகையில் ஸ்பான்ச் போன்ற அமைப்பாக மாற்றி, அதன்பின் நிலத்தடி நீர் செறிவூட்டலை துரிதப்படுத்த ஆழ்துறை கிணறு அமைக்கப்பட்டு சீரமைக்கப்படுகிறது. இதன் மூலம் மழைநீர் நிலத்தில் ஊடுருவி நிலத்தடி நீரை மேம்படுத்தி, வெள்ள அபாயத்தை குறைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகளில், மண்டலக் குழுத் தலைவர்எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப. சுப்பிரமணி, எம்.ஸ்ரீதரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலாங்கரை பகுதியில் பச்சிளம் குழந்தையை மாடியிலிருந்து வீசி கொலை செய்து நாடகமாடிய தாய் கைது

**சென்னை ஜூன் 13-**

சென்னை, ஈஞ்சம்பாக்கம் பகுதியில் வசித்து வரும் அருண், என்பவர் அன்று நீலாங்கரை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில், தனக்கும், பாரதி என்பவருக்கும் திருமணமாகி, சுமார் 49 நாட்களுக்கு முன்பு இரட்டை பெண் குழந்தை பிறந்ததாகவும், கடந்த 10ந் தேதி அன்று காலை நான் வேலைக்கு சென்ற சமயம் வீட்டிலிருந்த 2 பச்சிளம் குழந்தைகளில் ஒரு குழந்தையை காணவில்லை என்றும் தேடி பார்த்தபோது, வீட்டின் அருகேயுள்ள புதரில் குழந்தை இறந்து கிடந்ததாகவும், விசாரித்தபோது, தனது மனைவி குழந்தையை தூக்கிக் கொண்டு மாடிக்கு சென்றபோது மாடியிலிருந்து தவறி விழுந்து இறந்ததாக தெரிவித்ததாகவும், தனது குழந்தை இறப்பில் சந்தேகம் உள்ளதாக குறிப்பிட்டிருந்தார். அதன்பேரில், நீலாங்கரை காவல் நிலையத்தில் இயற்கைக்கு மாறான மரணம் பிரிவில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

நீலாங்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில், அருண், பாரதி தம்பதியருக்கு பிறந்த 37 வாரத்திலேயே இரட்டை பெண் குழந்தைகள் குறை பிரசவத்தில் பிறந்ததாகவும், இதில் ஒரு குழந்தைக்கு வளர்ச்சி இல்லாமல், சிகிச்சை அளித்தும் சரியாகாததால், இரு பெண் குழந்தைகளும் தினசரி அழுது மற்றொரு குழந்தையையும் வளர்க்க முடியாமல் சிரமப்பட்டு தாயார் பாரதி மன உளைச்சலுக்கு ஆளாகி உடல்நலம் சரியில்லாத குழந்தையை மாடிக்கு தூக்கி சென்று மாடியிலிருந்து வீசி எறிந்து விட்டு, தவறி விழுந்து இறந்ததாக நாடகமாடியது தெரியவந்தது.

அதன்பேரில், இவ்வழக்கின் சட்டப்பிரிவு கொலை வழக்கு பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டு, குழந்தை இறப்பிற்கு காரணமான பாரதி, சென்னை என்பவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரி பாரதி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

# கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரயில் சேவை சீரானது

**சென்னை ஜூன் 13-**

சென்ட்ரலில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரயில் சேவை சீரானது. நேற்றுமுன் தினம் மாலை 5:50 மணிக்கு, சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரயில் தடத்தில், மீனம்பாக்கம் அருகில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து, சென்ட்ரலில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் நேரடியாக மெட்ரோ ரயில் சேவை நிறுத்தப்பட்டது. ஆலந்துார் வரை மட்டுமே இயக்கப்பட்டது.இதேபோல், விம்கோ நகர் – விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரயில்கள், மீனம்பாக்கம் வரை மட்டுமே இயக்கப்பட்டன. தொழில்நுட்ப பணியாளர்கள், மீனம்பாக்கத்தில் கோளாறு சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். ஒரு மணி நேரத்துக்கு பின், விம்கோ நகர் – விமான நிலையத்துக்கு நேரடி மெட்ரோ ரயில் சேவை துவங்கப்பட்டது. இந்த கோளாறால், நேரடியாக விமான நிலையம் செல்ல வேண்டிய பயணியர், மூத்த குடிமக்கள் கடும் அவதிப்பட்டனர். சிலர், மாநகர பேருந்துகள்,6 கால்டாக்சி, ஆட்டோக்களில் பயணம் செய்தனர்.இந்நிலையில் சென்ட்ரலில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரயில் சேவை சீரானது என சென்னை மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது. விம்கோ நகர் – விமான நிலையம் மற்றும் சென்ட்ரல் மெட்ரோ – பரங்கிமலை செல்லும் ரயில்கள் வழக்கம் போல்இயக்கப்படுகிறது.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# காஞ்சிபுரத்தில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்: கலெக்டர் கலைச்செல்வி தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**காஞ்சிபுரம், ஜூன் 13 -**

காஞ்சிபுரம் மாவட்டம் கலெக்டர் அலுவலகத்தில் உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கலெக்டர் கலைச்செல்வ தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு உறுதிமொழி அரசு அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர். கலெக்டர் கலைச்செல்வி குழந்தைத் தொழிலாளர் முறை விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை, கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார். விழிப்புணர்வு விளம்பர பதாகைகளையும் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து பள்ளி இடைநின்ற மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்கி, குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை வாகனங்களில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

விழிப்புணர்வு வாகனத்தை கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் ( பொது ) சத்யா, தொழிலாளர் உதவி ஆணையர் ( அமலாக்கம் ) சுதா, தொழிலாளர் துணை ஆய்வாளர் இராஜகோபால், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சம்பத்குமார், தொழிலாளர் உதவி ஆய்வர் விஜயலட்சுமி, ஹேண்ட் இன் ஹேண்ட் அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் என, ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



**சென்னை வேப்பேரி காவல் ஆணையரக அலுவலகத்தில் காவல் கூடுதல் ஆணையர் விஜயேந்திர பிதாரி தலைமையில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியை அலுவலர்கள எடுத்துக்கொண்டனர்.**



**வளசரவாக்கம் மண்டலம் 144வது வார்டு எம் எம் டி ஏ காலனி 4வது பிளாக் 2 வது பிரதான சாலை சென்னை நடுநிலை பள்ளியில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்துவைத்தார் .இதில் மாமன்ற உறுப்பினர் எம்.இ. ஸ்டாலின் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்**

# மயங்கி கிடந்த மூதாட்டியை மீட்டு உயிரை காப்பாற்றிய போலீசார்

**சென்னை ஜூன் 13-**

கே.கே.நகர், பி.ராஜன் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 2வது தளத்தில் பீனாபால், என்ற மூதாட்டி ஆதரவற்ற நிலையில் தனியாக வசித்து வருகிறார். இவரை அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள அக்கம் பக்கத்தினர் கவனித்து வருகின்றனர். நேற்று முன் தினன் காலை வெகுநேரமாகியும் மேற்படி மூதாட்டி வீட்டின் கதவை திறந்து வெளியே வரததால், அடுக்குமாடி குடியிருப்பின் செயலாளர் ராம் என்பவர் R-7ல் கே.கே.நகர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததின் பேரில் தலைமைக் காவலர் திநாராயணன் இரண்டாம் நிலை காவலர் மதுரை வீரன், ஆகிய இருவரும் சம்பவயிடத்திற்கு விரைந்து சென்று வீட்டின் பூட்டை உடைத்து, கட்டிலிருந்து கிழே விழுந்து மயங்கிய நிலையில் கிடந்த மூதாட்டி பீனாபாலை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மூதாட்டி பீனாபால் தற்போது நலமாக உள்ளார்.

# அமைந்தகரை பகுதியில் மருத்துவர் வீட்டில் தங்க நகைகள் திருடிய பெண் கைது

**சென்னை ஜூன் ,13-**

சென்னை, அமைந்தகரை, அய்யாவு காலனியில் மோகன்ஜார்ஜ், என்பவர் அவரது மனைவி திருமதி.பிரக்னா ஜார்ஜ், என்பவருடன் வசித்து வருகிறார். மோகன் ஜார்ஜ் தனியார் பெட்ரோல் நிலையம் நடத்தி வரும் நிலையில், பிரக்னா ஜார்ஜ் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக வேலை செய்து வருகிறார். மோகன் ஜார்ஜ் கடந்த ஏப்ரல் மாதம் பீரோவில் வைத்திருந்த நகைகளை சரி பார்த்த போது, சுமார் 60 சவரன் மதிப்புள்ள மோதிரம், கம்மல், சங்கிலி, வளையல் என 20க்கும் மேற்பட்ட தங்க நகைகள் மற்றும் பணம் ரூ.50,000/- திருடு போயிருந்தது தெரியவரவே, மோகன் ஜார்ஜ், K-3 அமைந்தகரை காவல் நிலைய குற்றப் பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அமைந்தகரை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வீட்டில் வேலை செய்து வந்த எதிரி சுகன்யா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 16 சவரன் தங்க நகைகள் மற்றும் ஒரு ஐபோன் மீட்கப்பட்டது.விசாரணையில், பிரக்னா ஜார்ஜ் வேலை செய்து வரும் தனியார் மருத்துவமனையில் உதவியாளராக வேலை செய்து வரும் சுகன்யா என்பவரை அவரது வீட்டிற்கு வேலை செய்வதற்காக அழைத்ததின்பேரில், 2021ம் ஆண்டு முதல் சுகன்யா வாரம் ஒரு முறை சென்று வேலை செய்து வந்ததும், சுகன்யா யாரும் பார்க்காத சமயத்தில் பீரோ சாவியை எடுத்து பீரோவை திறந்து தங்க நகைகளை சிறிது சிறிதாக திருடிச் சென்றதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சுகன்யா விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# பழவந்தாங்கல் பகுதியில் பெண்ணிடம் தங்கச்சங்கிலி பறிக்க முயற்சி: இருவர் கைது

**சென்னை ஜூன் 13-**

சென்னை, நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த பவானி,என்பவர் 6.ந் தேதி அன்று இரவு வீட்டினருகே உள்ள சுதந்திர பூங்காவில் நடைபயிற்சி முடித்துவிட்டு வீட்டிற்கு செல்ல, 17வது தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த போது, பின்புறமாக வந்த இருசக்கர வாகனத்தில் ஆணுடன் பின்னால் அமர்ந்திருந்த பர்தா அணிந்திருந்த ஒரு பெண் திடீரென்று பவானி கழுத்திலிலிருந்த தங்கச்சங்கிலியை பறித்துள்ளார்.

உடனே, சுதாரித்துக் கொண்ட பவானி தங்கச்சங்கிலியை இறுக பிடித்துக் கொண்டு சத்தம் போடவே, இருவரும் தங்களது இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். இது குறித்து பவானி பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பழவந்தாங்கல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, கண்காணிப்பு கேமரா பதிவுகள், நவீன தொழில்நுட்ப தரவுகள் மூலம், குற்றவாளிகளின் அடையாள விவரங்கள் மற்றும் ஓட்டி வந்த வாகன விவரங்கள் கண்டறிந்து, மேற்படி சங்கிலி பறிப்பு முயற்சியில் ஈடுபட்ட மரிய சுமித்ரா, மற்றும் சங்கிலி பறிப்பில் வாகனம் ஓட்டி வந்த இவரது கணவர் அந்தோணி ராஜ், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டனர்.

# பள்ளி மாணவனிடம் கைக்கடிகாரம் மிரட்டி பறிப்பு: ஒருவர் கைது

**சென்னை ஜூன் 13-**

சென்னை, பெரம்பூரைச் சேர்ந்த செல்வகுமார், வ/44 என்பவரது மகன் 12ம் வகுப்பு படித்து வருகிறார்.

**கடிகாரம் பறிப்பு**

இவரது மகனான மேற்படி மாணவன் கடந்த 09.ந் தேதி அன்று மாலை, சி.ஒய். எஸ். ரோடு மற்றும் பார்க் தெரு சந்திப்பு அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்றிருந்த 2 பேர் மாணவனை வழிமறித்து அவர் அணிந்திருந்த கைக்கடிகாரத்தை கேட்டுள்ளனர். மாணவன் தர மறுக்கவே, 2 பேர் மாணவனை கையால் தாக்கி, அருகிலிருந்த இரும்பு கம்பியால் தாக்கும்போது, பொதுமக்கள் வருவதை கண்டு எதிரிகள் இருவரும் மாணவனையும், பொதுமக்களையும் மிரட்டி அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை செல்வகுமார் P-2 ஓட்டேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளில் ஷேக் கையூப், என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ஷேக் கையூப் மீது ஏற்கனவே 1 கொலை முயற்சி வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி ஷேக் கையூப் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# உயர்கல்வி வழிகாட்டி கட்டுப்பாட்டு அறை: சென்னை மாவட்ட கலெக்டர் தகவல்

**சென்னை ஜூன் 13-**

சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாட்டில் அடுத்த 3 ஆண்டுகளில் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு, 2022ம் ஆண்டு பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்வித்துறை கூட்டு முயற்சியுடன் 'நான் முதல்வன் திட்டம்' தொடங்கப்பட்டது.

**ஆலோசனை**

உயர்கல்வி வழிகாட்டி கட்டுப்பாட்டு அறையின் மூலம், பெற்றோர் அற்ற மாணவர்கள், மாற்றுத் திறனாளி மாணவர்கள், ஒற்றை பெற்றோர் உள்ள மாணவர்கள், அகதிகள் முகாமில் வாழும் மாணவர்கள், கல்லூரி கட்டணம் செலுத்த இயலாதவர்கள், உயர்கல்வி சார்ந்த விழிப்புணர்வு தேவைப்படும் மாணவர்கள், குடும்ப உறுப்பினர்கள் உடல் நிலை சரியில்லாத காரணத்தால், பெற்றோர்கள் விருப்பமின்மையால் மற்றும் சமூக காரணங்களால் உயர் கல்விக்கு செல்ல இயலாத மாணவர்கள், சான்றிதழ்கள் தேவைப்படும் மாணவர்கள், திருமணம் போன்ற காரணங்களால் உயர்கல்வி தொடர இயலாத மாணவர்கள், குடும்ப சூழல் காரணமாக வேலைக்கு செல்லும் மாணவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும். மாவட்ட கட்டுப்பாட்டு அறை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக 6வது தளத்தில் அனைத்து அரசு வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணிவரை செயல்படும். மாவட்ட கட்டுப்பாட்டு அறையின் வழியாக ஆலோசனை தேவைப்படும்

**கட்டுப்பாட்டு அறை**

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும். 11 ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு பாலிடெக்னிக், ஐடிஐ போன்ற தொழில் சார்ந்த படிப்புகளில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயர் கல்வி சார்ந்த உதவிகள், ஆலோசனைகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரி , பாலிடெக்னிக் மற்றும் ஐடிஐ காலிப்பணியிடங்கள் சார்ந்த விவரங்கள் என, அனைத்து தகவல்களும் உயர்கல்வி கட்டுப்பாட்டு அறை வாயிலாக வழங்கப்படும்.

**சேர்க்கை**

மேலும் சென்னை மாவட்டத்தில் உள்ளஅரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை மேற்கொள்ள தேவையான உதவிகள் செய்யப்படும். மேலும், விவரங்களுக்கு 044 25268320 எக்ஸ்டென்சன் 604, 9894468325 (கட்டுப்பாட்டு அறை தொடர்பு எண்) எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மெரினா கடற்கரைக்கு பேட்டரி வேன் சேவை தொடக்கம்

**சென்னை ஜூன் 13-**

மாற்றுத்திறனாளிகள், முதியோர் மெரினா கடற்கரைக்கு எளிதில் செல்லும் வகையில், பேட்டரி வேன் சேவை தொடங்கப்பட்டுள்ளது. சர்வீஸ் சாலைகளில் 4 இடங்களில் வாகன நிறுத்தம் அமைத்து, முதற்கட்டமாக 2 வாகனங்களை பயன்பாட்டிற்கு சென்னை மாநகராட்சி கொண்டு வந்துள்ளது.

### புதுச்சேரி வில்லியனூரில்

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

## முதல்வர் ரங்கசாமி வழங்கினார்



**புதுச்சேரி ஜூன் 13,**

புதுச்சேரி அரசு ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் இயங்கி வரும் வில்லியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் செயல்பட்டு வரும் வில்லியனூர் வட்டார அளவிலான மகளிர் கூட்டமைப்பின் கீழ் 42 பஞ்சாயத்து அளவிலான மகளிர் கூட்டமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்த 42 மகளிர் கூட்டமைப்புகளில் 1,680 மகளிர் சுய உதவிக்குழுக்களும் 20,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் உதவிகள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுக்கு விவசாய டிராக்டர், நடவு இயந்திரம் மற்றும் பிங்க் ஆட்டோ வழங்கும் விழா இன்று வில்லியனூர் ஸ்ரீ ராஜா திருமண மஹாலில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக முதல்வர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், வேளாண்துறை அமைச்சர் தேனீ ஜெயக்குமார், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான இரா. சிவா உள்ளிட்டோர் கலந்துகொண்டு, 42 பஞ்சாயது அளவிலான மகளிர் கூட்டமைப்புகளில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் உதவிகள், பஞ்சாயத்து அளவிலான மகளிர் கூட்டமைப்புகளுக்கு சமுதாய மூதலீட்டு நிதி கடன், கூட்டு பொறுப்பு குழுக்களுக்கான துவக்க நிதி, சுய உதவி குழு சுழல்நிதி, வங்கி கடன், பிரதான் மந்திரி மைக்ரோ உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு கடன், வாழ்வாதார சேவை மையம் அமைத்தல், மாட்டு தீவன தயாரிக்கும் மையம் அமைத்தல், விவசாய டிராக்டர், நடவு இயந்திரம் மற்றும் பிங்க் ஆட்டோ வாங்குவதற்கு என மொத்தம் ரூபாய் 10 கோடியே 90 ஆயிரம் மதிப்பிலான நலதிட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி, வாழ்த்தி பேசினர்.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அரசு செயலர் குலோத்துங்கன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இஷிதா ராட்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அதிகாரி மற்றும் வில்லியனூர் வட்டார வளர்ச்சி அதிகாரியுமான தயானந்த் டென்டுல்கர், இணை வட்டார வளர்ச்சி அதிகாரி கலைமதி, கிராம சேவக், சேவக்குகள்,

திட்ட இணைப்பு அதிகாரி, வட்டார அளவிலான மகளிர் கூட்டமைப்பின் ஊழியர்கள், வட்டார மேலாளர்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளின் சமூக வல்லுனர்கள், கணக்காளர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### செஞ்சி பேரூராட்சி சக்கராபுரத்தில்

# ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டும் பணிக்கான பூமி பூஜை

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஜூன் -13,**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 18 வது வார்டு சக்காராபுரம் குளக்கரைபகுதியில்புதிய உயர் மட்ட மேம்பாலம் கட்ட வேண்டும் எனஅப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்துநபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் சக்கராபுரம் இறக்கத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாக்ஸ் கல்வெட்டு மேம்பாலம் கட்டுவதற்கு பூமி பூஜை விழா நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். 18 வது வார்டுகவுன்சிலர் மோகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன்,நகர செயலாளர் கார்த்திக்,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் சங்கர், அஞ்சலை நெடுஞ்செழியன், சிவக்குமார், வார்டு செயலாளர் ஜி.டி.தனசேகரன்,தொண்டரணி பாஷா,நிர்வாகிகள்சேகர், ராம்குமார், ஜாபர் ஷரீப், மொபின், வீ ரக் கு மார் தேசிங்கு ராஜன், ராஜராஜன், மகளிர் அணி சரஸ்வதி, நிர்மலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

### ஜெயங்கொண்டான் ஊராட்சியில் சிறப்பு கால்நடை சுகாதார விழிப்புணர்வு மருத்துவ முகாம்

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஜூன் -13,**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் கோட்டம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் செஞ்சி ஒன்றியம் ஜெயகொண்டான் ஊராட்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.விழுப்புரம் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர்டாக்டர் பிர சன் னா, திண் டி வ னம் கோட்டகால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் டாக்டர் தண்டபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அப்பம்பட்டு கால்நடை மருத்துவஅலுவலர் டாக்டர் மணிமாறன் அனைவரையும் வர வேற் றார். நி கழ்ச் சி யில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு குத்து விளக்கு ஏற்றி முகாமை தொடங்கி வைத்தார்.இதைத் தொடர்ந்து 442 பசுக்களுக்கு முன்னெச்சரிக்கை அடைப்பான் நோய் தடுப்பு ஊசிகள் போடும் பணியையும், 127 கன்றுகள் மற்றும் 268 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம்தடுப்பூசிகள் போடும் பணியும் மேலும் நாய்களுக்கு வெறி நாய் தடுப்பூசி போடும் பணிகளை அவர் தொடங்கி வைத்தார்.

முன் ன தா க சி றப் பாக கிடாரி கன்றுகளை வளர்த்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு பரிசுகளையும், கால்நடை வளர்ப்பவர்களுக்குதீவன விதைகள்,புல் விதைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங் கி னார்.கால் நடை சிறப்பு மருத்துவ முகாமில் நோயற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல், கன்றுகள் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் ,சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் செய்தல், சிறு அறுவை சிகிச்சைகள் ,நீண்ட நாட்களாக சினையுறாமல் உள்ள கிடாரிகள், பசுக்கள், எருமைகளுக்கு மலட்டுத்தன்மை நீக்கி சிகிச்சை அளித்தல், கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தடுப்பூசி போடுதல், உள்ளிட்ட பண்ணை ஆலோசனைகளை கால்நடை விழிப்புணர்வு முகாமில் வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி சுப்பிரமணியன், விழுப்புரம் மாவட்ட கால்நடைநோய் புலனாய்வு உதவி இயக்குனர் கார்த்திகேயன், கால்நடை மருத்துவர்கள் சகுந்தலா, சந்தோஷ்,நிர்வாகிகள் வாசு அய்யாதுரை, தொண்டரணி பாஷா,இளைஞர் அணி பழனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கால்நடை மருத்துவர் நிர்மலன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை**
**நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை**

### செஞ்சி ஒன்றியம் மாத்தூர் திருகை ஊராட்சியில்

# ரூ.9.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய தானியக்களம் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை

## ஒன்றிய தலைவர் விஜயகுமார் தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஜூன்-13,**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மாத்தூர் திருகை ஊராட்சிபுது மாத்தூரில் விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் புதிய தானியக்களம் அமைத்து கொடுக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கையினை ஏற்றுஅனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 9 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புது மாத்தூரில் விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் புதிய தானியக்களம் அமைப்பதற்கு பூமி பூஜை விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாத்தூர் திருகை பங்குத்தந்தை லெனின் ஆன்ரூஸ் சிறப்புவழிபாடும் பிரார்த்தனை செய்தார்.இதைத் தொடர்ந்து செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் கலந்து கொண்டு புதிய தானியக்களம் அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளரும்,விழுப்புரம் மாவட்ட ஆவின் இயக்குனர் மாத்தூர் தாஸ்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் குமார், நிர்வாகிகள் சக்திவேல்,ரவி,செல்வம், கருணாகரன்,பாண்டியன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### இந்தக்கல்வியாண்டில்

# தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 50 சதவீத இடங்களை அரசின் இட ஒதுக்கீடாக அறிவிப்பு வெளியிட வேண்டும்

## புதுச்சேரி அதிமுக செயலாளர் அன்பழகன் பேட்டி

**புதுச்சேரி ஜூன் 13,**

புதுச்சேரி அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மத்தியில் பிரதமராக மோடி பதவியேற்றதில் இருந்து அட்டவணை இனத்தவர், சமுதாயத்தில் பின் தங்கிய ஒடுக்கப்பட்டு விளிம்பு நிலையில் உள்ள மக்களின் ஏற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களின் உரிமையை கல்வியால் மட்டுமே பாதுகாக்க முடியும் என அண்ணல் அம்பேத்கர் கூறியிருந்தார். அதனடிப்படையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளிய சமுதாயத்தில் கீழ் நிலையில் உள்ளவர்களின் பிள்ளைகள் தரமாக கல்வி பயில வேண்டும் என மத்திய அரசு கல்வி உரிமைச்சட்டத்தை கொண்டுவந்தது. இச்சட்டத்தின் படி நாட்டில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளும் ஏழை எளிய மாணவர்களின் பிள்ளைகள் தரமான கல்வி பயில 25 சதவீத மாணவர்களுக்கு கட்டணமில்லா இலவச கல்வியை வழங்க வேண்டும். இதற்காக கட்டணத்தை மத்திய மாநில அரசுகள் ஒதுக்கும்.

புதுச்சேரியில் அண்டை மாநிலமான தமிழகத்தில் புரட்சி தலைவர் அம்மா ஆட்சியிலும், அதனை தொடர்ந்து கழக பொதுச்செயலாளர் எடப்பாடியார் அவர்களின் அதிமுக ஆட்சியிலும் கல்வி உரிமைச்சட்டம் அமல்படுத்தப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்து தரமான தனியார் பள்ளிகளிலும் 25 சதவீத ஏழை மாணவர்கள் இலவச கல்வி பெறுகின்றனர்.மத்தியில் ஆட்சி நடத்தும் பாஜகவின் கூட்டணி ஆட்சி புதுச்சேரியில் நடைபெற்று வரும் நிலையில் மத்திய அரசின் கல்வி உரிமைச்சட்டத்தை இங்கு அமுல்படுத்தாது வியப்பாக உள்ளது. தற்போது தனியார் பள்ளிகளில் அட்டவணை இன பிள்ளைகளுக்கு இலவச கல்வி வழங்கப்படுவதை தவிர்த்து மேலும் 25 சதவீத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்படும். இதில் ஒடுக்கப்பட்ட பின்தங்கிய பிரிவின் மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கி எதிர்காலத்தில் முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்லமுடியும்.

இன்றுவரை தனியார் பள்ளிகளுக்கு ஆதரவாக புதுச்சேரியில் கல்வி உரிமைச்சட்டம் அமல்படுத்தாதது கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இதற்கு மேலும் புதுச்சேரி ஏழை எளிய மாணவர்களின் இலவச கல்வி பயிலும் உரிமைகள் பறிக்காமல் இத்திட்டத்தை செயல்படுத்த முதலமைச்சர் அவர்களும், துணை நிலை ஆளுநர் அவர்களும் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். புதுச்சேரி மத்திய பல்கலைக்கழத்தில் உள்ள அனைத்து பாடங்களிலும் 25 சதவீத உள் ஒதுக்கீட்டை புதுச்சேரி மாநிலத்தல் சட்டப்படி வழங்க வேண்டும். கடந்த 20 ஆண்டு காலமாக சில குறிப்பிட்ட பாடங்களுக்கு மட்டும் வழங்கப்படும் 25 சதவீத புதுச்சேரி மாணவர்களுக்கான உள் ஒதுக்கீட்டை பெற துணை நிலை ஆளுநர் உரிய நடவடிக்கையை எடுக்காதது வருத்தமளிக்க கூடிய விஷயமாகும். புதுச்சேரி மாணவர்களுடைய உரிமையை பெற்றுத் தர வேண்டியது துணை நிலை ஆளுநருடைய தலையாய கடமையாகும்.

இது சம்பந்தமாக புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் மத்திய அரசு அனுமதியளித்தால் 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். மத்திய அரசின் அனுமதியை பெற வேண்டியது பல்கலைக்கழக துணைவேந்தரின் பொறுப்பாகும். நாடுமுழுவதும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் குறைந்தபட்சம் 50 சதவீத இடஒதுக்கீடு மாநில ஒதுக்கீடாக வழங்க வேண்டும் என மத்திய பாஜக அரசு முடிவெடுத்து தேசிய மருத்துவ கவுன்சில் மூலம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பே அரசாணை வெளியிட்டது. புதுச்சேரியில் ஆளும் பாஜக கூட்டணி அரசானது மத்திய அரசின் இந்த அறிவிப்பை கூட செயல்படுத்த முன்வராதது மத்திய பாஜக அரசுக்கு நேர் எதிரான செயல்பாடாக உள்ளது. இதிலும் முதலமைச்சர் அவர்களும், துணை நிலை ஆளுநர் அவர்களும் இணைந்து இந்த கல்வியாண்டில் தனியார் மருத்துவ கல்லூரிகளில் 50 சதவீதமான இடங்களை அரசின் இடஒதுக்கீடாக வழங்குவதற்கான அறிவிப்பை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது மாநில கழக அவைத்தலைவர் அன்பானந்தம், மாநில கழக பொருளாளர் ரவிபாண்டுரங்கன்,மாநில கழக துணைச் செயலாளர்கள் நாகமணி, கிருஷ்ணமூர்த்தி, மாநில இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் தமிழ்வேந்தன், மாநில மீனவர் அணி செயலாளர் ஞானவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

# அரசின் பல்வேறு நல திட்டங்கள் மூத்த குடிமக்கள் பெற கூடிய வகையில் கைபேசி திட்டம்

## மாவட்ட நிர்வாகம் வெளியீடு

**அரக்கோணம் ஜூன் 13.**

தமிழகத்தில் குடியிருக்கும் மூத்த குடிமக்கள் அரசின் பல்வேறு நல திட்டங்கள் பெற கூடிய வகையில் தற்போது கைபேசி திட்டத்தினை அறிமுகபடுத்தி உள்ளது இது தொடர்பாக இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட பத்திரிக்கை செய்தியில் கூறியுள்ளதாவது. மூத்த குடிமக்கள் அவசர காலங்களில் பயன்படுத்தி கொள்ள சில விவரங்கள் மருத்துவமனை விவரங்கள், முதியோர் இல்லங்கள், அதிகாரிகள் விவரம் மாற்று மருத்துவ மருத்துவமனை மாவட்ட சட்ட உதவிகள் அனைத்தும் மூத்த குடிமக்களின் கைப்பேசி செயலில் பெறலாம் இதற்காக தமிழ்நாடு அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயல்படுத்த இருக்கிறது எனவே இலைகளை நன்கு பயன்படுத்தி கொள்ளவும்

மூத்த குடிமக்கள் தங்கள் கைப்பேசியில் (பிளே ஸ்டோர் வழியாகவோ (அ) மூத்த குடிமக்களுக்கான வலைதளத்தின் வழியாகவோ பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அரசு தகவலை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டு உள்ளது.

## அரக்கோணம் நகரில் இலவச கண் அறுவை சிகிச்சை முகாம்

**அரக்கோணம் ஜூன் 13**

அரக்கோணம்ரோட்டரி கிளப் சார்பில் முன்னாள் தலைவரும் கண்முகாம் ஒருங்கிணைப்பாளரும் , ஜவுளி வியாபாரிகள் சங்க ,தலைவருமான பி.இளங்கோ வெளியிட்ட பத்திரிகை செய்தியில் கூறியதாவது:-

அரக்கோணம் ரோட்டரி சங்கத்துடனும் சென்னை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை உடனும் அரக்கோணம் ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் இணைந்து வருகிற 15-ந் .தேதி காலை 8:21 அரக்கோணம் பழைய பஸ் நிலையம் அருகே சிஎஸ்ஐ சென்ட்ரல் மேல்நிலைப்பள்ளியில் இலவச கண் அறுவை சிகிச்சை முகாம் நடக்க இருக்கிறது. ஆகவே இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

இவ்வாறு அவர் கூறினார். மேலும் முகாம் பணிகளில் சங்க தலைவர் ஆர்பி.ராஜா மற்றும் ஆர்கே.பிரபாகரன் .விகாஸ் ஜெயின் நரேந்திரகுமார் மற்றும் சங்க உறுப்பினர்கரும் & என தெரிவித்து உள்ளார்.

**Format C-1**

( for candidate to publish in Newspapers, TV )

Declaration about criminal cases

( As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr. )

| | | |
|---|---|---|
| **Name and address of candidate** | : | **M.DHANAPAL,** S/o. M. Madurai, 1/1, Vasuvasamuthram Road, Prabilimedu, Pudupattinam, Kalpakkam, Chengalpattu District – 603 102. |
| **Name of Political Party** | : | **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM** |
| **Name of Election** | : | **BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025*** |
| **Name of Constituency** | : | **BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025** |

I, M. DHANAPAL, a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

(A) Pending criminal cases

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| I | Not Applicable | i) Cr.No. 685/2024 Maduranthakam, PS | Under investigation | I U/s. 189(2), 126(2), 292 of BNS Act. Demonstration without getting permission from the police and disturbing the traffic. |
| | | ii) Cr. No. 77/2025 Thirukazhukundram, PS | Under investigation | ii) U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. |

(B) Details about cases of conviction for criminal offences

| Sl. No. | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | **Maximum Punishment Imposed** |
|---|---|---|---|
| 1. | Not Applicable | Not Applicable | Not applicable |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

**M. DHANAPAL**
AIADMK Candidate
Biennial Elections to Council of States, 2025

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

